# R 5168 (page 27)

# இன்னும் அங்கே இடமிருக்கிறது

## "YET THERE IS ROOM"

*"ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு." (வெளிப்படுத்தல் 3:11)*

ஒருவருக்கென்று அங்கே ஒரு கிரீடம் ஒதுக்கி வைக்கப்படாதிருந்தாலொழிய, சுவிசேஷ யுகத்தின் இந்த கடைசி மணி நேரத்தில் ஒருவர் தன்னை அர்ப்பணம் பண்ணி ஏற்றுக் கொள்ளப்பட கூடுமா என்ற கேள்வி சில சமயம் கேட்கப்படுகிறது. தன்னைத்தானே அர்ப்பணம் பண்ணுவது நிச்சயமாக நடக்கக்கூடியதாக இருக்கிறது. அர்ப்பணமானது எப்பொழுதும் சரியாக இருக்கிறது. சுவிசேஷயுகம் ஆரம்பிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பு ஆபிரகாம் மற்றும் தீர்க்கதரிசிகள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணினார்கள். இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் தங்களது ஜீவனை நீதிக்கும் தேவனுக்கும் அர்ப்பணம் பண்ணினதை காண்பித்தார்கள் என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். ஏனெனில் அவர்களில் பெரும்பாலானவர்கள் தேவனுக்காக துன்பப்பட்டு வேதனைப்பட்டு துர்மரணம் அடைந்தார்கள். உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை என்பதை மெய்ப்பித்தார்கள். (எபிரேயர் 11:33-38) எனினும் அர்ப்பணத்தில் தன்னை ஒப்புக் கொடுத்த ஒருவர் தனது பலியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கவில்லை. "தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல" (அப். 10:34) என்பது உண்மையாயிருந்தாலும் அவரது சலுகை முதலாவது யூதருக்கும் பிறகு புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டது. இந்த சலுகை எந்த நிலையிருக்கும் ஜீவராசிகளுக்கும் மிகவும் ஆச்சரியமானதாகும். அதாவது இதன் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுகிற அனைவரும் கிறிஸ்துவின் மறைபொருளான சரீரமாகிய சபைக்குள் வரலாம். அதாவது தேவையான எண்ணிக்கை நிறைவாகும் வரை அதாவது முன் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் அர்ப்பணம் செய்து, தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிற வரை அதில் அங்கமாகலாம்.

நாம் சுவிசேஷ யுகத்தின் முடிவில் இருக்கிறோம் என்பதை வேதவாக்கியங்கள் தெளிவாக குறிப்பிடும்போது, அதன் அர்ப்பணம் செய்த முழு எண்ணிக்கையிலானவர்கள் எப்போது நிறைவடைவார்கள் என்பதை தெரிந்து கொள்வது நமக்குரியதல்ல. பொதுவாக வெளியிலிருந்து அழைக்கப்படுதல் கி.பி. 1881இல் முடிவடைந்து விட்டது என்பது நமது நம்பிக்கையாக இருக்கிறது.

கி.பி.1878-ல் அர்ப்பணம் செய்த அநேகர் தங்களது சோதனையில் முழுமையாக வெற்றி பெறவில்லை என்று நாம் எண்ணுகிறோம். பேர்சபைகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்க முழுமையாக அர்ப்பணம் செய்திருந்தார்கள். 1874லிருந்து 1881 வரை அநேக எண்ணிக்கையிலான ஊழியர்கள் இந்த நாட்டிலும் (அமெரிக்கா) வெளிநாடுகளிலும் போதனை செய்தார்கள். சுவிசேஷகர் மூடி என்பவர் மிகவும் அறிந்தவராக இருந்தவர். அவர் அநேகரை மனந்திருப்பினார். அவர் மற்ற சுவிசேஷகர்களைக் காட்டிலும் வேறு மாதிரியாக போதனை செய்ததாக காணப்பட்டார். இயேசுவின் இரத்தத்தினால் முழு பாவ மன்னிப்பு, தேவனிடத்தில் முழு அர்ப்பணிப்பு போன்றவைகளை போதித்தார்.

அந்த மறுமலர்ச்சி காலத்தில், அநேகர் முழு அர்ப்பணம் செய்து, தங்களது நாமம் பரலோகத்தில் எழுதப்படவும் தேவையான எண்ணிக்கையை நிறைவடையவும் செய்தார்கள். ஆனால் சோதனை வந்தபோது அநேகர் திரள் கூட்டத்தாருக்கு மேலான உயர்ந்த பரிசுக்கு அபாத்திரரானார்கள். மற்றவர்கள் அபாத்திரரானவர்களின் இடத்தை எடுத்துக் கொண்டனர். அவர்களும் சோதிக்கப்பட்டு, சலிக்கப்பட்டனர். காலியிடம் ஏற்பட்டது; இன்னும் அநேகர் அந்த ஒரு சந்தர்ப்பத்திற்கு வந்தனர். இந்த காரியங்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்து வந்ததற்கான ஆதாரங்களை நாம் காண்கிறோம். இவரது நாமங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதும் அவர்களுக்காக கிரீடம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை என்று நாங்கள் நம்புகிறோம்.

## இந்த கருத்துக்கு நாம் கூறும் காரணம்

மத காரியங்களில் அக்கறையில்லாமலிருந்து, அதனிமித்தம் தேவனிடம் அர்ப்பணம் செய்யாதவர்கள், சமீபத்தில் தங்களை தேவனிடம் முற்றிலுமாக அர்ப்பணம் செய்து, அவர்களை தேவன் ஏற்றுக் கொண்டதற்கான ரூபகாரங்களை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தேவனைப்பற்றிய ஆழ்ந்த காரியங்களை அல்லது ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளும்படியான கண்களை திறக்கப்படுதலை மாத்திரம் பெறாமல், பலியிடுவதற்கான சந்தர்ப்பத்தையும் பெற்றிருக்கிறார்கள். நாம் நம்மை பலியாக ஒப்புக் கொடுப்போம் என்று உடன்படிக்கை பண்ணினாலும் (சங்கீதம் 50:5) அப்படிச் செய்ய சந்தர்ப்பத்தைக் கொடுப்பது தேவன் கையிலிருக்கிறது. சமீபத்தில் அப்பணம் செய்த சிலர், பலியிடுவதற்கான சந்தர்ப்பத்தை பெற்று அதை பயன்படுத்துகிறார்கள் என்ற உண்மை, அவர்கள் அர்ப்பணம் பண்ணினபொழுது இடம் காலியாக இருந்து அதை அவர்கள் நிரப்புகிறார்கள் என்பதை குறிப்பாக உணர்த்துகிறது.

கி.பி. 1878லிருந்து அநேகர் இப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற உண்மை, தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பட்டியலில் கணிசமான காலியிடம் இருக்கிறது என்பதையும், அவை படிப்படியாக நிரப்பப்பட்டு வருகின்றன என்பதை குறிப்பாக உணர்த்துகிறது. எவ்வளவு இடம் காலியாக இருக்கிறது என்றும் எப்பொழுது நிரப்பப்படும் என்றும் சொல்வது நமக்குரியதல்ல. எனினும் அக்டோபர் 1914இல் முடிவடையும் என்று நாம் நம்புகிற "புறஜாதியார் காலம்" முடிவடைவதற்கு முன்னர் அது நிரப்பப்படும் என்று நாம் முழுமையாக நம்புகிறோம்.

இன்னும் தங்களை அர்ப்பணம் செய்யாதவர்களை பரிசுத்த பவுலோடு சேர்ந்து இப்படியாகச் சொல்லலாம்: ‘‘உங்கள் சரீரங்களை... ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.’’ (ரோமர் 12:1) உங்களால் முடிந்ததை செய்யுங்கள். அங்கே இடமிருந்தால் நீங்கள் பெறலாம். உங்கள் நேரம், உங்கள் தாலந்துகள், இன்னும் நீங்க பெற்றிருக்கிற அனைத்தையும் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணம் பண்ணுங்கள். அவர் ஒரு நல்ல கிருபையளிப்பவர். அவர் என்ன சன்மானம் கொடுத்தாலும் அது உங்களுக்கு பரிசாக இருக்கும்.

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக் கொள்ளப்படவிருக்கிற அனைவரும் ராஜ்யத்தில் திட்டமான இடம் கொடுக்கப்படுவதற்கு முன், விசுவாசம் மற்றும் உண்மைத்தன்மை ஆகிய இரண்டிலும் சோதனைகளைப் பெற வேண்டும். பாதகர்களாக ஆகிறவர்கள் இரண்டாம் மரண வகுப்பில் இடம் பெறுவார்கள். மற்றவர்கள் திரள் கூட்டத்தில் இடம் பெறுவார்கள். இவர்கள் ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கமாக எண்ணப்பட மாட்டார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் அபாத்திரராக எண்ணப்பட்டு, அவர்களது முந்தைய இடம் காலியாகி,

**R5169 : page 27**

அவர்களது கிரீடம் நீக்கப்படும். தம்மை அர்ப்பணிக்கிற நாம் இப்படிப்பட்ட காலி இடங்களில் இப்பொழுது நிரப்பப்பட்டு வருகிறோம் என்று புரிந்து கொள்ளுகிறோம்.

பொதுவான அழைப்பு முடிந்துவிட்டது என்று நாம் முன்பே கூறியது போல, நாம் நம்புகிற இந்த நிலைமை 1881இல் இருந்து பெறப்படுகிறது. இடம் காலியாகும்போது, தெரிந்தெடுக்கப்பட்டு காத்திருக்கிற மனோபாவத்தில் இருக்கிறவர்களில் மிகவும் நன்றாக அபிவிருத்தியடைந்து, முழுமையாக கர்த்தரிடத்தில் இணக்கமாக இருக்கிறவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள் என்று நம்புவது நியாயமானது.

‘‘கர்த்தர் உன்னோடிருப்பாராக!’’ விழுகின்ற நட்சத்திரத்தை போல
பயபக்தியான வெளிச்சத்துடனான ஆசீர்வாதம் நீங்கும்போது;
துன்பத்துடனான இரவும் சந்தோஷமான காலையும்,
எதிரொலிக்காத இனிமையை அருகேயும், தூரத்திலேயும் சுவாசிக்கிறது.

‘‘கர்த்தர் உன்னோடிருப்பாராக!’’ நிழல் உன்னை பிடித்துக் கொள்ளும்போது
அவரது அன்பின் சக்தி ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் நிரூபிக்கிறது.
ஆபத்து உன்னை இருளாக்கி, பயம் சுற்றிமூடும்போது;
அவரது மென்மையில் ‘‘கர்த்தர் உன்னோடிருப்பாராக!’’

---

See more Books & Articles at www.foodfornewcreature.com